# பரத நாட்டியம்

## தரம் 11

## ஆசிரியர் வழிகாட்டி

(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)



அழகியற் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
www.nie.lk
info@ni.lk

# பரத நாட்டியம்

## ஆசிரியர் வழிகாட்டி
## தரம் 11

**(2017ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**

**அழகியற்கல்வித் துறை,**
**மொழிகள், மானுடவியல் சமூக விஞ்ஞான பீடம்,**
**தேசிய கல்வி நிறுவகம்,**
**மஹரகம.**
**www.nie.lk**
**info@nie.lk**

பரத நாட்டியம்
ஆசிரியர் கைந்நூல்
தரம் - 11
பாடத்திட்டம் - 2017

தேசிய கல்வி நிறுவகம்

ISBN

முதற் பதிப்பு : 2017
தேசிய கல்வி நிறுவகம்

அழகியற் துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம.
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

***அச்சுப் பதிப்பு:***
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பெற்றது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்பெறும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் வழியாக இது அறிமுகப்படுத்தப்பெற்றது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2016ஆம் ஆண்டிலிருந்து தரம் 7, 11 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்பட உள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின்போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பெற்று, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிவு நிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பெற்ற பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப்படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பெற்ற பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பெற்ற பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்,**
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கும் கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக் கோலத்தை உருவாக்கிக் கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக் கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்பெறும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப் பெறுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மையைத் தேசிய மட்டத்திற் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடையும் பொருட்டு, பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்ளும் சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பெற்றுள்ள ஆசிரியர் வழிகாட்டியை, ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், எதிர்பார்க்கப் பெறும் அடைவுகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர் களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். மகிழ்வளிக்கத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்,**
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

# கலைத்திட்டக் குழு

ஆலோசனையும் வழிகாட்டலும் : கல்விசார் அலுவல்கள் சபை
தேசிய கல்வி நிறுவகம்

பாட நிபுணத்துவ ஆலோசனை: திரு. சுதத் சமரசிங்ஹ
பணிப்பாளர் - அழகியற்துறை

பாட இணைப்பாக்கம்: திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்
செயற்றிட்ட தலைவர்
அழகியற் கல்வித்துறை

எழுத்தாளர் குழு:
(உள்வாரி) திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்
செயற்றிட்ட தலைவர்
அழகியற் கல்வித்துறை

(வெளிவாரி) திருமதி தயானந்தி விமலச்சந்திரன்
ஆசிரிய ஆலோசகர்
மேல் மாகாணம்.

திருமதி பாரதி சிவயோகநாதன்
ஆசிரிய ஆலோசகர்
வலயக்கல்வி அலுவலகம், கொழும்பு 02.

மொழி மேற்பார்வை: திரு.து.இராஜேந்திரம்
ஓய்வு பெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர்
திறந்த பல்கலைக் கழகம்.

கணனி கோர்ப்பும் வடிவமைப்பும்: செல்வி க.தாட்ஷாயனி

அட்டைப்பட வடிவமைப்பு: திரு. ரவீந்ர தேநுவர

# அறிமுகம்

ஆரம்பக் கல்வியை நிறைவு செய்து கொண்டு, கனிஷ்ட இடைநிலைப் பிரிவில் 6ஆம் தரத்தில் கல்வியைக் கற்கவரும் மாணவர்களுக்குப் பொருத்தமானதாகப் புதிய பரத நாட்டியப் பாடத்திட்டம் இங்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. புதிய கல்வித் திட்டங்களும் புதிய எண்ணக்கருக்களும் இக்கலைத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம், சித்திரம், நாடகமும் அரங்கியலும் ஆகிய கவின் கலைகள் ஒன்றிணைந்த பாடமாகக் கற்பிக்கப்பட்டு 2007ஆம் ஆண்டிலிருந்து இக்கலைகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக 6ஆம் தரத்தில் இரசித்தல், ஆக்கத்திறன், செய்முறை, அறிமுறை கலாசாரப் பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் கற்றல் தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டு இக்கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டு புதிய சாகரத்தின் இரண்டாம் கலைத்திட்டமாக மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

தற்கால உலகில் மாற்றமடையாத ஒன்று மாற்றம் ஆகும். அதற்கமைய கலைத்திட்டத்திலும் மாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. எந்தவொரு கலைத்திட்ட மறுசீரமைப்பும் இரண்டு அம்சங்களில் மாற்றங்களைப் பிரேரிக்கின்றது.

(1) பாடச் சேர்க்கை - பாடக்கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்தல், பாடவிடயங்களை இற்றைப்படுத்தல் (இலகுபடுத்தல்)

(2) பாடவிடயங்களை மாணவரிடம் கொண்டு சேர்ப்பதற்காக முன்வைக்கப்படும் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை

மாணவர் மையக் கல்விக்கு முதலிடம் கொடுக்கின்ற இப்புதிய கலைத்திட்டமானது, மாணவர்களும் ஆசிரியரும் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், மாணவர்களின் தேடிக் கற்றலை ஊக்குவிப்பதற்குரிய செயற்பாடுகள் பலவற்றைக் கொண்டதாகவும், கற்றல் - கற்பித்தல் என்பவற்றை தெளிவாகப் புரிந்து தாமே விருப்பத்தோடு ஈடுபடுவதற்கு ஏற்றவகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

**தற்கால கல்வி முறையின் மூன்று தூண்களாவன:-**

(1) அறிந்துள்ளவற்றைப் பேணிவருதல்.

(2) முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விடயங்களைக் கற்றல்.

(3) ஏற்கனவே கற்கப்பட்ட விடயத்தை மீண்டும் கட்டியெழுப்புதல் என்பனவாகும்.

இச்செயற்பாடு ஏற்கனவே அறிந்துள்ளவற்றைத் தொடர்ந்தும் மாற்றியமைத்து புதுமைப்படுத்தும் புதிய சமூகமொன்றை உருவாக்கும். இதுவரைகண்டறியப்படாதவை தொடர்பாக, இளம் சந்ததியினரை வழிப்படுத்துவது இன்றியமையாதது ஆகும். தேடலில் ஈடுபட்டு, ஏற்கனவே அறிந்துள்ளவற்றை மாற்றியமைத்தும், இதுவரை கண்டறியப்படாதவற்றை தேடியறிவதற்கும் மாணவர்களைப் பழக்கப்படுத்துவது இப்புதிய கல்வித் திட்டத்தின் நோக்கமாகும்.

வெற்றிகரமான வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான திறன்கள், ஆற்றல்களை அதாவது ஒன்றிணைந்த ஆளுமைக்கு இன்றியமையாத சிந்தனைத் திறன் (Thinking skill ), சமூகத் திறன் (Social skill ), சுயதிறன் (Personal skill ) ஆகியவற்றை விருத்தி செய்வதற்குரிய காலமாகப் பாடசாலைக் காலத்தில் வழங்கப்படத்தக்கவாறு தயாரிக்கப்பட்ட ஒரு பொதுவான கலைத்திட்டம் இதுவாகும்.

வந்தபின் செயற்படும் அணுகுமுறைக்குப் பதிலாக, வருமுன் செயற்படும் அணுகுமுறையைக் கைக்கொள்வது இன்றைய எதிர்கால சந்ததியினருக்கு அவசியமானதொன்றாகும். எனவே, நாளைய உலகை வெற்றி பெறுவதற்காகத் தேடலை முனைப்பாகக் கொண்ட வகையில், இப்புதிய கலைத்திட்டம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்கால சமூகத்திற்குத் தேவையான ஆளுமையுடைய சமூகத்தை உருவாக்குவது இப்புதிய பாடத்திட்டத்தின் தாரக மந்திரமாகும்.

# ஆசிரியர் கைந்நூலைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள்.

2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய மறுசீரமைப்பை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள பரதநாட்டிய பாடத்திட்டத்தைக், கற்றல் கற்பித்தல் செயன்முறையை வெற்றிகரமாக நடாத்துவதற்குத் துணைபுரிவதற்காகவே இந்த ஆசிரியர் கைநூல் உங்களிற்கு அறிமுகப்படுத்தப்படுகின்றது. இதனைப் பயன்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

- ❖ பாடசாலையின் வருடாந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கமைவாக நேர முகாமை செய்தல்.

- ❖ 5 தேர்ச்சிகளின் கீழ் வரிசைப்படுத்தப்பட்டுள்ள உள்ளடக்கத்திற்கமைவாக 1.0 தொடக்கம் 5.0 வரையிலான செயன்முறைத் தேர்ச்சிகளின் மட்டங்களுக்காக மாதிரிச் செயற்பாடானது தரப்பட்டுள்ளது. அந்தந்தத் தேர்ச்சி மட்டத்திற்கமைவாக விரைந்துரைக்கப்பட்டுள்ள தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு திட்டமிட்டுச் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

- ❖ தாமே ஒரு செயற்பாட்டைச் செயற்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனமெடுப்பது பயனுடையதாகும்.
  - ➢ அழகியல் சார்ந்த அல்லது பாடத்துடன் இணைந்த சுவாரசியமான முன்வைப்பொன்றின் மூலம் களிப்பூட்டத்தக்கவாறு படிக்கும் விடயங்களின் மூலம் மாணவரைப் பாடத்தின் பால் ஈர்த்தல். முன்னிலை மீட்டல், ஊக்கமளித்தல் மூலம் பாடச் செயற்பாட்டை அணுகுதல்.
  - ➢ மாணவரது இயல்பான ஆற்றல்களை இனங்கண்டு ஆக்கபூர்வமான கற்றல் - கற்பித்தல் முறைகளை மேற்கொண்டு பின்னூட்டலைக் கையாண்டு செயற்பாட்டை இறுதிவரை இட்டுச் செல்லல்.
  - ➢ முன்வைப்புக்கள், மதிப்பீடு, மீளாய்வு, பின்னூட்டல் வேலைகள், ஒப்படைகள் போன்றவற்றை உள்ளடக்கி ஒட்டு மொத்த பாடத்தை நிறைவு செய்தல்.
  - ➢ இந்த ஆசிரியர் கைநூல் ஒரு வழிகாட்டல் மாத்திரமே ஆகும். பாடம் சார்ந்த நூல்கள், இணையத்தளங்கள் போன்ற ஊடகங்களை உசாவுதல் மூலம் மாணவர் அறிவூட்டம் பெற்றுக் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை மேலும் செழுமைப்படுத்திக் கொள்ளலாம்.

- ❖ அறிமுகம் செய்யப்பட்டுள்ள 5 தேர்ச்சிகளும் தனியாளின் ஆளுமை விருத்தியை அடிப்படையாகக் கொண்டு தட்டியெழுப்பப்பட்டுள்ளமையால் 5 தேர்ச்சிகளுக்குமுரிய விடய உள்ளடக்க முறைமையை வகுப்பறையில் நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

- ❖ பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டவாறு மூன்று தவணைக்குரிய செயற்பாட்டினை வகுப்பறையில் நடைமுறைப்படுத்துக.

| தவணை 1 | தவணை 2 | தவணை 3 |
|---|---|---|
| செயற்பாட்டு இலக்கம் : 1.1, 2.1, 3.1.1, 4.1, 4.2.2, 4.2.3, 5.1.1 | செயற்பாட்டு இலக்கம் : 1.2.1, 1.2.2, 1.2.3, 2.2, 3.1.2, 4.2.3, 4.2.4, 4.3.1, 4.4, 5.2.1 | செயற்பாட்டு இலக்கம் : 1.3.1, 1.3.2, 1.3.3, 2.3.1, 3.1.3, 4.2.5, 4.3.2, 4.5.1., 5.1.2, 5.2.2 |

**தேர்ச்சி 1:0 : நயத்தல்**

- நயத்தல் தொடர்பான கற்பித்தலை மேற்கொள்ளும் போது மாணவர்களின் இரசனையைத் தூண்டி அவர்களின் வெளிப்பாட்டை வெளிக்கொண்டு வரவேண்டும். அதற்குக் கவர்ச்சியான முறையில் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெற வேண்டும்.

**தேர்ச்சி 2:0 : ஆக்கத்திறன்**

- ஆக்கத்திறனில் மாணவர்களை ஈடுபடுத்தும் போது அவர்களுக்குரிய வழிகாட்டல்கள் மத்திரம் ஆசிரியரினால் வழங்கப்பட வேண்டுமேயல்லாமல் எச் சந்தர்ப்பத்திலும் ஒரு நிகழ்வு ஆசிரியரினால் ஆக்கி வழங்கப்படக் கூடாது.

- அனைத்தும் மாணவர்களின் சொந்தக் கற்பனையாகவே இருக்க வேண்டும்.

**தேர்ச்சி 3:0 : செய்முறை**

- செய்முறைப் பயிற்சியில் ஈடுபடுத்தும் போது பாத அசைவுகளில் குறித்த தேர்ச்சி மட்டத்தை அடைந்த பின்பு தான் கை அசைவுகளுக்குரிய பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

- பாடவேளை போதாதவிடத்து மேலதிக வகுப்புக்களை நடாத்தி மாணவர்களைக் குறித்த மட்டத்தை அடையச் செய்ய வேண்டும்.

- முதலில் காற்செய்கையையும், பின்னர் கைச் செய்கையையும் தனித்தனியாக பயிற்சியளித்துத் தொகுத்தல் வேண்டும்.

**தேர்ச்சி 4:0 : அறிமுறை**

- அறிமுறைப் பாடப்பகுதிகள் அனைத்திற்கும் அன்றைய தினக் கற்றல் நடைபெற்று முடிந்த பின்பு மணவர்கள் குறிப்பெடுத்திருத்தல் அவசியமாகும்.

- குறிப்புக்கள் திருத்தப்பட்டு மாணவர்கள் அவற்றை வீட்டில் விரிவான வசன ஆக்கம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

- அதன் பின்பு தான் தேவையேற்படின் ஆசிரியர்கள் விரிவான விளக்கக் குறிப்பு வழங்கப்பட வேண்டும்.

- எக் காரணம் கொண்டும் ஆசிரியர் கைந்நூலில் வழங்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்பு அப்படியே மாணவர்களுக்கு வழங்கப்படலாகாது.

- அத்துடன் ஆசிரியரின் தேடலும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- அடவுகள், உருப்படிகளுக்கான குறியீட்டு முறை விளக்கம் அளிக்கப்படும் போது, முதலில் ஒவ்வொரு தட்டிற்குமுரிய சொற்கட்டுக்கள் கீழ்காட்டியவாறு எழுதப் பயிற்றுவிக்கவும்.
  **உ+ம் தா தெய் தெய்த அடவு**

உள்ளுறையாக

**பக்கம்**


| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| கலைத்திட்டக்குழு | v |
| அறிமுகம் | vi |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் | viii |
| • **தேசிய இலக்குகள்** | xi |
| • **அடிப்படைத் தேர்ச்சிகள்** | xii |
| • **பாடத் தேர்ச்சிகள்** | xiv |
| **பாடத்திட்டம்** | xv |
| **கற்றல் கற்பித்தல் செயலொழுங்கிற்கான ஆவோசனைகள்** | 01 |
| **தவணை I** | 02- 11 |
| **தவணை II** | 12 - 24 |
| **தவணை III** | 25- 37 |

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபருக்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

I. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

II மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

III. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

IV. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

V. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

VI. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி செய்தல்.

VII. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

VIII. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## அடிப்படைப் பொதுத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### I. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரு வகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விவரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழிலில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### II. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சி, நுண்ணறிவு.

### III. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வும் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**V. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**VI. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**VII. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை 2003)

# பாடத் தேர்ச்சிகள்

- பரத நாட்டியத்துடன் தொடர்பான இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் ஊடாக அறிவு, திறன், மனப்பாங்கை வளர்த்துக் கொள்வார்.
- சிறந்த நடனக் கலைஞராக மிளிர்வதற்கான ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்வார்.
- படைப்பாக்கத் திறனை விருத்தி செய்வார்.
- தேசிய, பன்னாட்டுக் கலைகளை அறிந்து மதிப்பளிப்பார்.
- அழகியல் நயப்புடையவராவார்.
- கலைஞர்களை மதிக்கும் உளப்பாங்கை வளர்ப்பார்.
- பண்பாட்டின்பால் பற்றுறுதியையும், மரபைக் கையேற்கும் மனப்பாங்கையும் விருத்தி செய்வார்.
- தன்னாற்றலை இனங்கண்டு, கலை நிகழ்வுகளை ஆற்றுகைப்படுத்தும் திறனை விருத்தி செய்வார்.
- சிறந்த தொடர்பாடற் திறனை விருத்தி செய்வார்.
- தாமாக முன்வந்து அர்ப்பணிப்புடன் செயலாற்றும் திறனைப் பெறுவார்.
- இயற்கையை நயந்து வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.
- நவீன தொழில்நுட்ப சாதனங்களைக் கையாளும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.
- வாழ்தொழிலுக்கான அடிப்படைப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வார்.
- நுட்பங்களைக் கையாண்டு கைவினைக் கலைகளை ஆக்குவார்.
- குழுவாக இயங்கும் பண்பை விருத்தி செய்வார்.
- பன்மைக் கலாசார சமூகத்துடன் சிறந்த ஆளிடைத் தொடர்புகளைப் பேணுவார்.
- சமூக அங்கீகாரம், புகழ் என்பவற்றைப் பெற்றுக் கொள்வார்.
- கலை நுணுக்கங்களை அறிந்து அதனை விபரிக்கும், விமர்சிக்கும் ஆற்றல்களைப் பெற்றுக் கொள்வார்.
- கலைத் தேடலின் ஊடாகப் புதிய முன்வைப்புகளுக்கு முயற்சிப்பார்.

# கற்றல் கற்பித்தல் செயலொழுங்கிற்கான ஆலோசனைகள்

# முதலாம் தவணை

**தேர்ச்சி 1.0** : சூழலை இரசித்துத் தமது இரசனையை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்1.1** : நவரஸங்களை இயற்கையின் உற்பாதங்களினூடாக் நயந்து வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு 1.1** : வாத்ஸல்யபாவம், பக்தி ஆகியவற்றையும் நவரஸங்களையும் நயந்து வெளிப்படுத்துவோம்.

**பாடவேளைகள்** : 4

**தரஉள்ளீடுகள்** : நவரஸங்கள் வாத்ஸல்யபாவம், பக்தி ஆகியன அடங்கிய காணொளி இறுவட்டு.

**கற்றற் பேறுகள்** :

- நவரஸங்களைக் கூறுவார்.
- வாத்ஸல்யபாவம், பக்தி ஆகியவற்றை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.
- இயற்கை உற்பாதங்களினைத் தொடர்ந்து இடம்பெறும் நிகழ்வுகளினால் உண்டாகும் ரஸங்களை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.
- நடைமுறை நிகழ்வுகளில் நவரஸங்கள் வெளிப்படுமாற்றை நயந்து வெளிப்படுத்துவார்.
- நவரஸங்களை அபிநயித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ ஏற்கனவே கற்ற நவரஸங்களை மாணவர்களின் மீள் நினைவிற்குக் கொண்டு வருதல்.
- ♦ சாதாரண செயற்பாடுகளில் நவரஸங்கள் வெளிப்படும் சந்தர்ப்பங்களைப் பற்றிக் கலந்துரையாடல்.
- ♦ நவரஸங்கள் அடங்கிய காணொளி இறுவட்டினைக் காட்சிப்படுத்தல்.
- ♦ இயற்கை உற்பாதங்களினால் (சூறாவளி, புயல், வெள்ளப்பெருக்கு, சுனாமி போன்றவை) ஏற்படக்கூடிய இரஸங்களை இனங்காணுதல்.
- ♦ சமூகச் செயற்பாடுகளினூடாக ரஸம் வெளிப்படுதல்( வழியில் பாம்பைக் காணுதல்)
- ♦ அவ்வாறு ஒன்பது இரசங்களையும் இனங்கண்டு அபிநயித்துக் காட்டுவதற்குச் சந்தர்ப்பமளித்தல்.
- ♦ வாத்ஸல்ய பாவம் அடங்கிய காணொளி இறுவட்டினைப் பார்வையிடச் செய்தல்.
- ♦ பலவகைப்பட்ட வாத்ஸல்யங்கள் இருந்தாலும் புத்ர வாத்ஸல்யமே பெருமளவில் பேசப்படுகின்றது.
- ♦ குழந்தைப் பராயத்திலிருந்து தன்னுடைய தாய் எவ்வாறு அன்பு

காட்டினார் என்பதையும், எவ்வாறு அன்பு செலுத்த வேண்டும் என்று மாணவர்கள் எதிர்பார்ப்பதையும் கலந்துரையாடல் மூலம் வெளிக் கொண்டு வரவும்.
(அன்பு தொடர்பான மனவெளிச்சிப் பிரச்சினை மாணவர்களிடம் காணப்படுமாயின் அதற்கான பரிகாரங்கனை மேற்கொள்ளவும்.)

- ♦ வடக்கே சூர்தாசரும், கன்னட தேசத்து புரந்தரதாசரும் பாலகிருஸ்ணனைக் குழந்தை கிருஸ்ணனாக வர்ணித்து வாழ்ந்தனர். புரந்தரதாசரின் ‘‘கிருஸ்ணா நீ பேகனே பாரோ’’ என்ற பாடல் குறிப்பிடத்தக்கது. அவ்வாறே சின்னச் சின்னப்பாதம் வைத்து ‘‘கண்ணா நீ வா’’ என்ற பாடலையும் அபிநயித்து வாத்ஸல்ய பாவத்தைக் காட்டலாம்.

- ♦ அதே போன்று யசோதையும் கிருஸ்ணனும் வெளிப்படுத்தும் வாத்ஸல்ய பாவத்தினையும் அபிநயிக்கலாம்.

- ♦ பக்தியும் பல வகைப்பட்டது. அவற்றிலே குரு-சிஷ்யன் பக்தியை நடன வகுப்பிலே மாணவர் ஆசிரியரை வணங்கும் செயற்பாட்டினைச் செய்வித்துக் காட்டுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

- √ நவரஸங்களைக் குறிப்பிடுவார்.

- √ குரு-சிஷ்ய பக்தியை அபிநயித்துக் காட்டுவார்.

- √ தாய் - சேய் அன்பினைப் பற்றி நயந்தவற்றை வெளிப்படுத்தவார்.

- √ ஒரு தாய் தன்னுடைய சேயிடம் எவ்வாறு அன்பு காட்ட வேண்டும் என்ற தனது மன நிலையை வெளிப்படுத்துவார்.

- √ சமூகச் செயற்பாடுகளினூடாக ரஸங்களின் இரசனையை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி 2.0** : சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றையும் வெவ்வேறுவகையான பாடல்களையும், கோர்வைகளையும் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்2.1** : நவரஸங்களையும் இயற்கையின் உற்பாதங்களையும் சமூகச் செயற்பாடுகளையும் பாவனை செய்து வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு 2.1** : பிச்சைக்காரன், பாம்பு, இடி, மின்னல், பூகம்பம், சுனாமி போன்ற செயற்பாடுகளைப் பாவனை செய்வோம்.

**பாடவேளைகள்** : 3

**தர உள்ளீடுகள்** : பிச்சைக்காரன், பாம்பு, இடி, மின்னல்,பூகம்பம், சுனாமி போன்ற செயற்பாடுகள் அடங்கிய காணொளி இறுவட்டு.

**கற்றற் பேறுகள்** :

- பிச்சைக்காரனின் செயற்பாடுகளைப் பாவனை செய்வார்.
- பாம்பினைப் போல் அபிநயம் செய்வார்.
- இடி, மின்னல், பூகம்பம், சுனாமி போன்ற செயல்களைப் பாவனை செய்வார்.
- இடமின்னல், பூகம்பம், சுனாமியைத் தொடர்ந்து இடம்பெறும் நிகழ்வுகளைச் சித்திரிப்பதற்குரிய ஆக்கத்திறனைத் தமது கற்பனை வெளிப்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ காணொளி இறுவட்டினூடாக இடி, மின்னல், பூகம்பம், சுனாமி ஆகியவற்றைப் பார்வையிடச் செய்தல்.

♦ காணொளி இறுவட்டில் பார்வையிட்ட அம்சங்களுடன் மாணவர் பெற்ற அனுபவங்களைக் கொண்டு பின்வரும் விடயங்களைக் அபிநயிக்க வழிப்படுத்தல்.
- பிச்சைக்காரனின் செயற்பாடு.
- பாம்பின் அசைவு.
- இடி, மின்னல், பூகம்பம், சுனாமி இதனைத் தொடர்ந்து இடம்பெறும் நிகழ்வுகள்.

♦ மாணவர்களின் கநற்பனைத் திறனை விருத்தி செய்வதற்குக் குழுக்களாகப் பிரித்து இயற்கை அசைவுகளைப் பாவனை செய்யப் பணிக்கவும்.

♦ மாணவர்கள் குழுக்களாக அபிநயிக்கும் போது குறையுள்ள விடயங்களைச் சரியான முறையில் நெறிப்படுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ பிச்சைக்காரனின் செயற்பாடுகளைப் பாவனை செய்வார்.

√ பாம்பினைப் போல் அபிநயம் செய்வார்.

√ இடி, மின்னல், பூகம்பம், சுனாமி போன்ற செயற்பாடுகளைப் பாவனை செய்வார்.

√ தமது சுயமான கற்பனையை வெளிப்படுத்துவார்.

√ ஆக்கச் சிந்தனையை வெளிக்காட்டுவார்.

**குறிப்பு -** பொருத்தமான இசையுடன் அபிநயம் செய்யத் தூண்டுதலானது மாணவர்களை ஈடுபாட்டுடன் செயற்படத் தூண்டும்.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டியத்துக்குரிய ஆரம்ப பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்கள், ஹஸ்தங்களையும், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சிமட்டம்3.1** : பரதநாட்டிய சம்பிரதாய உருப்படிகளை அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.1.1** : ஜதீஸ்வரம் 3,4,5ஆம் கோர்வைகளைக் கொலுப்பித்து அபிநயிப்போம்.

**பாடவேளைகள்** : 13

**தரஉள்ளீடுகள்** : ஜதிஸ்வரம் 3,4,5ஆம் கோர்வைகள் எழுதப்பட்ட அட்டை, காணொளி இறுவட்டு

**கற்றற்பேறுகள்** :

- ஜதிஸ்வரத்தின் அனுபல்லவிக் கோர்வையை இனங்கண்டு கூறுவார்.
- ஜதிஸ்வரத்தின் சரணக் கோர்வையை இனங்கண்டு கூறுவார்.
- ஜதிஸ்வரம் 3,4,5 ஆம் கோர்வைகளைக் கொலுப்பிப்பார்.
- ஜதிஸ்வரத்தின் கோர்வைகளில் இடம் பெறும் அடவுகளை கூறுவார்.
- ஜதிஸ்வரத்தில் முழுமையாக ஸ்வரத்திற்கு ஆடி நிறைவு செய்வார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ முதல் வகுப்புக்களில் கற்ற ஜதிஸ்வரத்தின் 1ஆவது, 2ஆவது கோர்வைகளை அபிநயிக்கச் செய்தல்.

♦ ஜதிஸ்வரத்தின் 3,4,5ஆம் கோர்வைகளில் இடம்பெறும் அடவுகளைத் தனித்தனியாகப் பயிற்சியளித்து, கோர்வைகளை முழுமைப்படுத்தல்.

♦ முதலில் கோர்வைகளை நாட்டியச் சொற்கட்டிற்குப் பயிற்சியளித்துப் பின்பு ஸ்வரங்களுக்குப் பயிற்சியளிக்கவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ ஜதிஸ்வரத்தின் பல்லவி, அனுபல்லவி, சரணக் கோர்வைகளைக் கொலுப்பித்துக் காட்டுவார்.
√ ஜதிஸ்வரத்தின் பல்லவி, அனுபல்லவி, சரணக் கோர்வைகளை இனங்காணடு கூறுவார்.
√ ஜதீஸ்வரத்தினை ஸ்வரத்துடன் பாடிக் காட்டுவார்.
√ ஜதிஸ்வரத்தினை முழுமையாக ஸ்வரத்திற்கு ஆடி நிறைவு செய்வார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சிமட்டம்4.1** : பரத நாட்டியத்தின் அடிப்படை எண்ணக்கருக்களை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.1.1** : பரத நாட்டியக் கச்சேரி அமைப்பு முறை பற்றி அறிவோம்.

**பாட வேளைகள்** : 6

**தர உள்ளீடுகள்** : பரதநாட்டியக் கச்சேரி அமைப்பு எழுதிய உள்ளடக்க அட்டை.

**கற்றற் பேறுகள்** :

- நிருத்த, நிருத்திய உருப்படிகளை வேறுபடுத்தி உருப்படிகளுக்கிடையிலான வேறுபாடுகளைப் பகுத்தறிவார்.
- பரதநாட்டியக் கச்சேரி அமைப்பு முறைபற்றி அறிந்து குறிப்பிடுவார்.
- நிகழ்ச்சி ஒழுங்கினை வரிசைப்படுத்துவார்.
- உருப்படிகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகளைப் பட்டியற்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ மாணவர்கள் அறிந்து வைத்துள்ள நடன உருப்படிகள் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.

♦ ஏற்கனவே கற்ற பரத நாட்டிய உருப்படிகள் பற்றிக் கேட்டறிதல்.

♦ பரத நாட்டியக் கச்சேரி அமைப்பு முறையில் இடம்பெறும் உருப்படிகளை ஒழுங்கு முறையில் ஒவ்வொன்றாக விளக்குதல்.

♦ விளக்கும் போது மாணவர்களைக் குறிப்பெடுக்கச் செய்தல்.

♦ விடய உள்ளடக்க அட்டையைக் காட்சிப்படுத்தி விடுபட்ட விடயங்களை இணைத்துக் கொள்வதற்கு வழிகாட்டுதல்.

♦ குறிப்பேடுகளைப் பார்வையிட்டு முழுமைப்படுத்துதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ பரத நாட்டியக் கச்சேரி உருப்படிகளைப் பற்றிக் குறிப்பிடுவார்.

√ நிருத்த, நிருத்திய உருப்படிகளைக் குறிப்பிடுவார்.

√ உருப்படிகளுக்கிடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுவார்.

√ பரத நாட்டிய உருப்படிகளின் நிகழ்ச்சி நிரலை வரிசைப்படுத்துவார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சிமட்டம் 4.2** : பரத நாட்டியத்தின் அடிப்படை எண்ணக்கருக்களை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.2.1** : தாண்டவம் பற்றி அறிவோம்.

**பாடவேளைகள்** : 2

**தரஉள்ளீடுகள்** : சப்த தாண்டவம் (ஆடிய ஸ்தலம், சபை, தொழில், ஆடிய சந்தர்ப்பம் ) உள்ளடங்கிய அட்டை.

**கற்றற்பேறுகள்** :

- தாண்டவம் தோன்றிய கதையைக் குறிப்பிடுவார்.
- சிவபெருமான் ஆடிய தாண்டவங்கள் ஏழும் சப்த தாண்டவங்களாகும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- சப்தம் என்றால் ஏழு என்பதை ஏற்பார்.
- சப்த தாண்டவங்களைக் குறிப்பிடுவார்.
- அவை இடம் பெற்ற ஸ்தலம், சபை, ஆடிய சந்தர்ப்பம் என்பவற்றைக் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு** :

- ♦ தாண்டவம் பற்றி மாணவர்கள் அறிந்தவற்றை வினவிக் கலந்துரையாடுதல்.
- ♦ தாண்டவம் தோன்றிய கதையை விளக்குதல்.
  - அடிப்படைத் தாண்டவங்கள் 7.
  - அவை சப்த தாண்டவம் என அழைக்கப்படுதல்.
  - சப்த என்றால் 7. (உ+ம்) சப்த ஸ்வரங்கள்
  - அவை இடம் பெற்ற ஸ்தலம், சபை ஆடிய சந்தர்ப்பங்கள்
- ♦ விளக்கும் போது குறிப்பெடுக்கச் செய்தல்.
- ♦ விடய உள்ளடக்க அட்டையைக் காட்சிப்படுத்தி விடுபட்ட விடயங்களை இணைத்துக் கொள்வதற்கு வழிகாட்டுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

- √ தாண்டவம் தோன்றிய கதையை விவரிப்பார்.
- √ சப்த தாண்டவங்களைக் கூறுவார்.
- √ சப்த என்றால் 7 என்பதைக் கூறுவார்.
- √ அவை இடம்பெற்ற ஸ்தலம், சபை, தொழில், சந்தர்ப்பம் ஆகியவற்றை எடுத்து விவரிப்பார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்4.2** : பரத நாட்டியத்தின அடிப்படை எண்ணக்கருக்களை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.2.2** : சிலப்பதிகாரம் கூறும் 11 வகையான ஆடல்கள் பற்றி அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 2

**தர உள்ளீடுகள்** : சிலப்பதிகாரம் கூறும் 11 வகையான ஆடல்களையும் சந்தர்ப்பங்களையும் அட்டவணைப்படுத்திய அட்டை.

**கற்றற் பேறுகள்** :

- சங்கமருவிய காலத்திற்குரிய நூல் சிலப்பதிகாரம் என்பதைக் கூறுவார்.
- மாதவியின் நடனக் கல்வி பற்றி விளக்குவார்.
- 11வகை ஆடல்களைக் குறிப்பிடுவார்.
- அவ்வாடல்களை ஆடிய தெய்வங்களை நிரற்படுத்துவார்.
- ஆடப்பட்ட சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவார்.
- அவ்வாடல்களைச் சிலப்பதிகாரத்துடன் தொடர்புபடுத்துவார்.
- மாதவி அவற்றை ஆடிய சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ சிலப்பதிகாரம், பற்றி மாணவர்கள் அறிந்து வைத்துள்ள விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடவும்.

♦ சங்கமருவிய காலத்திற்குரிய நடனக் கலை பற்றி அறிய உதவும் நூல் சிலப்பதிகாரம் என்பதைக் கூறுதல்.

♦ பின்வருன பற்றி விளக்கமளித்தல்.
- சிலப்பதிகாரக் காலப் பகுதி
- மாதவி
- மாதவியின் அரங்கேற்றம்.
- 11 வகை ஆடல், ஆடப்பட்ட சந்தர்ப்பம்.

♦ விளக்கமளிக்கும் போது குறிப்பெடுக்கப் பணித்தல்.

♦ குறிப்புக்களைப் பார்வையிட்டுப் பூரணப்படுத்தவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ சிலப்பதிகாரக் காலப் பகுதியைக் கூறுவார்.
√ மாதவியின் அரங்கேற்றம் பற்றி விளக்குவார்.
√ சிலப்பதிகாரம் கூறும் 11 வகை ஆடல்களையும் குறிப்பிடுவார்.
√ 11வகையான ஆடல்களும் ஆடப்பட்ட சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 5.0** : நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.

**தேர்ச்சிமட்டம் 5.1** : கலைஞர்களின் வரலாற்றுப் பின்னணியை ஆராய்ந்து அறிவார்.

**செயற்பாடு 5.1.1** : வழுவூர் இராமையா பிள்ளையின் தோற்றம், வாழ்க்கைப் பின்னணி, அவர் கலைக்காற்றிய தொண்டு என்பவற்றை அறிவோம்.

**பாடவேளைகள்** : 1

**தரஉள்ளீடுகள்** : வழுவூர் இராமையாப்பிள்ளையின் புகைப்படம்

**கற்றற்பேறுகள்** :

- வழுவூர் இராமையாப்பிள்ளை அவர்களின் தோற்றம், வாழ்க்கைப் பின்னணி, கலைக்காற்றி தொண்டு ஆகியவற்றை அறிந்து விபரிப்பார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு** :

♦ பரத நாட்டியத்தில் உள்ள பாணிகள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடவும்.

♦ வழுவூர் இராமையாப்பிள்ளையின் புகைப்படத்தினைக் காட்சிப்படுத்திப் பின்வரும் விடயங்களை முன்வைக்கவும்.
- பிறப்பு
- பெற்றோர்
- வழுவூர்ப் பாணி
- கலைப் பணி
- அவரின் மாணவர்கள்
- நாட்டிய நிறுவனம்

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ வழுவூர் இராமையாபிள்ளை அவர்களின் பிறப்பு, பெற்றோர் பற்றிக் குறிப்பிடுவார்.

√ வழுவூர்ப் பாணி என்றால் என்பது பற்றிக் கூறுவார்.

√ இவர் கலைக்காற்றிய தொண்டினை விவரிப்பார்.

√ அவரின் இலங்கை, இந்திய மாணவர்கள் பற்றிக் கூறுவார்.

# இரண்டாம் தவணை

**தேர்ச்சி 1.0** : சூழலை இரசித்துத் தமது இரசனையை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்1.2** : தொழில்சார் நடனங்களை நயந்து வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு 1.2.1** : வாள் நடனத்தை நயந்து வெளிப்படுத்துவோம்.

**பாட வேளைகள்** : 2

**தர உள்ளீடுகள்** : வாள்நடனம் அடங்கிய காணொளி இறுவட்டு, வாள் நடனம் சம்பந்தமான படங்கள்.

**கற்றற் பேறுகள்** :

- போர்த் தொழிலைச் சித்தரித்து ஆடும் நடனம் என்பதைக் குறிப்பிடுவார்.
- வாள் நடனத்தில் நயந்தவற்றை வெளிப்படுத்துவார்.
- இந்நடனத்தின் பிரதான உபகரணமாகிய வாளினைக் கையாண்டு பார்ப்பார்.
- இந்நடனத்தின் ஆடை, ஆபரணங்களைப் பற்றி நயந்து குறிப்பிடுவார்.
- நடனத்திற்குரிய வீரமான அசைவுகளை மேற்கொண்டு பார்ப்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ வாள்நடனம் அடங்கிய காணொளி இறுவட்டினைப் பார்வையிடச் செய்தல்.

♦ வாள் நடனம் சம்பந்தமான படங்களைக் காட்சிப்படுத்துதல்.

♦ பார்வையிட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துலையாடி மாணவர்

♦ பாடலின் தன்மை அல்லது இடம்பெறும் ஜதிகளின் தன்மை

♦ பொருத்தமான அசைவுகள், வீரமான செயற்பாடுகள், பாத அசைவுகள்.

♦ நடனத்திற்குரிய ஆடை, அணிகலன் வாள் பயன்படுத்தப்பட்டமை.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ பாடலின் தன்மையைக் கூறுவார்.

√ வாள் ஏந்தி வீரமாக ஆடும் நடனத்தில் தமக்குப் பிடித்தமான அசைவினை ஆடிக்காட்டுவார்.

√ பொருத்தமான ஆடை, ஆபரணங்கள் அணியப்பட்டுள்ளமை பற்றி விபரிப்பார்.

**தேர்ச்சி 1.0** : சூழலை இரசித்துத் தமது இரசனையை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்1.2** : தொழில்சார் நடனங்களை நயந்து வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு 1.2.2** : குறவன், குறத்தி நடனத்தை நயந்து வெளிப்படுத்துவோம்.

**பாட வேளைகள்** : 2

**தர உள்ளீடுகள்** : குறவன், குறத்தி நடனம் அடங்கிய காணொளி இறுவட்டு, இந்நடனம் சம்பந்தமான படங்கள்.

**கற்றற் பேறுகள்** :

- மலைவளம், மலையில் வாழும் மக்களின் வாழ்க்கைமுறை, தொழிலைச் சித்தரித்து ஆடும் (தொழில்சார் நடனம்) குறவன், குறத்தி என்பதைக் குறிப்பிடுவார்.
- குறவன், குறத்தி நடனத்தில் நயந்தவற்றை வெளிப்படுத்துவார்.
- இந் நடனத்தின் ஆடை அணிகலன்களை நயந்து விபரிப்பார்.
- பாடலின் இசையை நயந்து வெளிப்படுத்துவார்.
- குறவன் குறத்தி நடன அசைவுகளை ஆடிக்காண்பிப்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ குறவன் குறத்தி நடனம் அடங்கிய காணொளி இறுவட்டினைப் பார்வையிடச் செய்தல்.

♦ இந்நடனம் சம்பந்தமான படங்களைக் காட்சிப்படுத்துதல்.

♦ பார்வையிட்ட விடயங்கள் தொடர்பாகக் கலந்துலையாடி மாணவர் இரசித்த விடயங்களை வெளிக் கொணர்தல்.

♦ மலைவளம், மலையில் வாழும் மக்களின் தொழல்கள் பற்றிச் சித்தரிக்கும் பாடல்களைச் செவிமடுத்தல்.

♦ பொருத்தமான அங்க அசைவுகள் பாதச்சுவடுகள், அபிநயங்கள்.

♦ நடனத்திற்கேற்ற விதத்தில் அணியப்படும் ஆடைஅணிகலன்கள்.

♦ பாடலில் குறவன் குறத்தி இருவரினதும் உரையாடல்களில் விரவியிரக்கும் நகைச்சுவை.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ பாடலின் தன்மையைக் கூறுவார்.
√ பாடலுக்குப் பொருத்தமான அங்க அசைவுகளில் சிலவற்றை ஆடி அபிநயிப்பார்.
√ அணியப்பட்ட ஆடை அணிகலன்களையும் சிறப்பாக இந்நடனத்திற்கேயுரிய ஆடை அணிகலன்களையும் விபரிப்பார்.

**தேர்ச்சி 1.0** : சூழலை இரசித்துத் தமது இரசனையை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்1.2** : தொழில்சார் நடனங்களை நயந்து வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு 1.2.3** : வேடுவ நடனத்தை நயந்து வெளிப்படுத்துவோம்.

**பாட வேளைகள்** : 2

**தர உள்ளீடுகள்** : வேடுவ நடனம் அடங்கிய காணொளி இறுவட்டு,

**கற்றற் பேறுகள்** :

- வேடுவர்கள் நாட்டின் ஆதிக் குடிகள் என்பதை ஏற்பார்.
- வேடுவர் வாழும் சூழல், அவர் தம் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைச் சித்தரித்து ஆடும் தொழில்சார் நடனம் வேடுவ நடனம் என்பதைக் குறிப்பிடுவார்.
- வேடுவ நடனத்தில் பின்வருவனவற்றை நயந்து வெளிப்படுத்துவார்.
  - வேடுவர் வாழும் சூழல்.
  - அவர்தம் பழக்கவழக்கங்கள் பற்றி விபரிக்கும் பாடலின் தன்மை.
  - வேட்டையைச் சித்தரிக்கும் ஆடல்.
  - ஆடை, அணிகலன்கள், ஒப்பனை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ வேடுவர்கள் நாட்டின் ஆதிக் குடிகள் என்பதைக் கூறி, அவர்களின் பழக்க வழக்கங்கள், கலை கலாசாரங்கள் தொடர்பாகக் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.

♦ வேடுவ நடனம் சம்பந்தமான படங்களையும், வேடுவ நடனம் அடங்கிய காணொளி இறுவட்டினையும் தொடர்ந்து காட்சிப்படுத்தல்.

♦ பார்வையிட்ட விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடி மாணவர் இரசித்த விடயங்களை வெளிக்கொணர்தல்.

- வேடுவர் வாழும் சூழல்.
- அவர்தம் பழக்கவழக்கங்கள் பற்றி விபரிக்கும் பாடலின் தன்மை.
- வேட்டையைச் சித்தரிக்கும் ஆடல்.
- ஆடை, அணிகலன்கள், ஒப்பனை

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ பாடலில் சித்தரிக்கப்படும் வேடுவரின் வாழ்க்கை பற்றிக் கூறுவார்.

√ பாடலுக்குப் பொருத்தமான அங்க அசைவுகளில் சிலவற்றை அபிநயித்துக் காட்டுவார்..

√ இந் நடனத்திகேயுரிய ஆடை, அணிகலன்களை விபரிப்பார்.

√ வேடுவர்கள் நாட்டின் ஆதிக் குடிகள் என்பதைக் கூறுவார்.

**தேர்ச்சி 2.0** : சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றையும் வெவ்வேறு வகையான பாடல்களையும், கோர்வைகளையும் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்2.2** : கோர்வைகளைத் தாமே அமைத்துக் கொலுப்பித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 2.2** : ஆதி, ரூபக தாளங்களிற் கோர்வைகளை அமைத்துக் கொலுப்பிப்போம்.

**பாட வேளைகள்** : 3

**தர உள்ளீடுகள்** : தட்டுக் கழி, தட்டுப் பலகை

**கற்றற் பேறுகள்** :

- ஆதி, ரூபக தாளங்களில் கோர்வை அமைத்துக் கொலுப்பித்துக் காட்டுவார்.
- கோர்வைகளுக்குரிய பொருத்தமான அடவுகளை இணைத்து அபிநயிப்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ ஏற்கனவே தரம் 10இல் கோர்வை அமைத்த முறையினைப் பின்பற்றி ஆதி தாளத்தில் 2 ஆவர்த்தனத்திற்கும் ரூபக தாளத்தில் 4 ஆவர்த்தனத்திற்கும் கோர்வைகள் அமைத்தல்.

♦ அவற்றிற்கு அபிநயிப்பதற்கு வழிப்படுத்தல்.

♦ கோர்வை, அபிநயம் அமைத்தல் என்பன மாணவரின் சுய ஆக்கமாக இருக்க வேண்டும். ஆசிரியர் இடர்படுமிடத்து உதவி மாத்திரமே வழங்கல் வேண்டும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ ஆதி தாளத்தில் 2 ஆவர்த்தனத்திற்குக் கோர்வை அமைத்துக் கொலுப்பிப்பார்.

√ ரூபக தாளத்தில் 4 ஆவர்த்தனத்திற்குக் கோர்வை அமைத்துக் கொலுப்பிப்பார்.

√ அமைத்த கோர்வைகளை அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டியத்துக்குரிய ஆரம்ப பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்கள், ஹஸ்தங்களையும், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்3.1** : பரத நாட்டிய சம்பிரதாய உருப்படிகளை அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.1.2** : சப்தம் என்னும் உருப்படியின் 1,2ஆம் கண்டிகைகளைக் கொலுப்பித்து அபிநயிப்போம்.

**பாட வேளைகள்** : 06

**தர உள்ளீடுகள்** : சப்தம் பாடல் எழுதப்பட்ட அட்டை, சப்தம் ஆடல் உள்ளடங்கிய காணொளி இறுவட்டு.

**கற்றற் பேறுகள்** :

- சப்தம் 1,2ஆம் கண்டிகைகளை அபிநயிப்பார்.
- சப்தத்தினைக் கொலுப்பிப்பார்.
- பொருள் கூறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ ஏற்கனவே கற்ற சப்தத்தின் இலட்சணங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடலில் ஈடுபடல்.

♦ காணொளி இறுவட்டினைப் பார்வையிடச் செய்தல்.

♦ பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடுதல்.
- சப்தம் - ஆயர் சேரியர் அல்லது தண்டை முழங்க....
- சப்தத்தின் இராகம், தாளம்
- ஜதி
- கண்டிகை.
- இடம்பெறும் தெய்வங்கள்.
- பொருள்.

♦ சப்தத்தினை ஒவ்வொரு கண்டிகைகளாகப் பயிற்றுவித்தல்.

♦ தாளத்துடன் கொலுப்பிக்கச் செய்தல்.

♦ பயிற்சி செய்த கண்டிகைகளைத் தனியாகவும், குழுவாகவும் பயிற்சி செய்து முழுமைப்படுத்துதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ சப்தத்தின் நான்கு கண்டிகைகளையும் அபிநயிப்பார்.
√ சப்தத்தினைக் கொலுப்பிப்பார்.
√ சப்தத்தின் பொருள் கூறுவார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்4.2** : பரத நாட்டியத்தின் அடிப்படை எண்ணக்கருக்களை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.2.3** : பஞ்சபாணங்கள் பற்றி அறிவோம்.

**பாட வேளைகள்** : 1

**தர உள்ளீடுகள்** : பஞ்சபாணங்கள் எழுதிய அட்டை.

**கற்றற் பேறுகள்** :

- பஞ்ச, பாணம் என்பதன் பொருள் கூறுவார்.
- பஞ்ச பாணங்களுக்குரிய கடவுளின் பெயரைக் குறிப்பிடுவார்.
- பஞ்ச பாணங்களைக் குறிப்பிடுவார்.
- பஞ்ச பாணங்களின் குணங்களைக் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ ஏற்கனவே கற்ற பஞ்ச ஜாதிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு பஞ்ச எக்பதன் பொருளை விளக்குதல்.

♦ பஞ்சபாணங்கள் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.

♦ பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.
  - பஞ்சபாணம் என்றால் என்ன என்பதை விளக்குதல்.
  - பஞ்சபாணங்கள்.
  - அவற்றின் குணங்கள்.

♦ பஞ்சபாணங்கள் எழுதப்பட்ட அட்டையைப் பார்வையிட்டு குறிப்பெடுக்கச் செய்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ பஞ்ச, பாணம் என்பதன் பொருள் கூறுவார்.

√ பஞ்ச பாணம் என்றால் என்ன என்பதனை விளக்குவார்.

√ பஞ்ச பாணங்களைக் குறிப்பிடுவார்.

√ பஞ்ச பாணங்களின் குணங்களை விளக்குவார்.

**தேர்ச்சி 4.0 :** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்4.2 :** பரத நாட்டியத்தின் அடிப்படை எண்ணக்கருக்களை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.2.4 :** சிஷ்யனின் இலட்சணத்தை அறிவோம்.

**பாட வேளைகள் :** 1

**தர உள்ளீடுகள் :** குருவைப் பணிந்து நிற்கும் சிஷ்யனின் படம்.

**கற்றற் பேறுகள் :**

- பாரம்பரிய குரு, சிஷ்ய முறை தொடர்பாகக் குறிப்பிடுவார்.
- சிஷ்யனின் இலட்சணங்களை விவரிப்பார்.
- நடைமுறை வாழ்க்கையில் இவற்றை எவ்வாறு கடைப்பிடிப்பது என்பது பற்றிக் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ பாரம்பரிய குரு, சிஷ்ய முறை தொடர்பாகக் கலந்துரையாடவும்.

♦ மாணவர்கள் குருவிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பாகக் கேட்டறியவும்.

♦ சிஷ்யனின் இலட்சணத்தை ஆசிரியர் விளக்குதல்.

♦ சிஷ்ய இலட்சணத்தை எழுதுவதற்கு வழிப்படுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

√ பாரம்பரிய குரு, சிஷ்ய முறை தொடர்பாக விளக்குவார்.

√ மாணவர்கள் குருவிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் கூறுவார்.

√ சிஷ்யனின் இலட்சணத்தை விவரிப்பார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்4.3** : இந்திய சாஸ்திரிய நடனங்களை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.3.1** : பரதநாட்டியம், கதகளி, குச்சுப்புடி ஆகிய நடனங்கள் பற்றி அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 4

**தர உள்ளீடுகள்** : பரத நாட்டியம், கதகளி, குச்சுப்பிடி ஆகிய நடனங்களின் படங்கள், காணொளி, இறுவட்டுக்கள்.

**கற்றற் பேறுகள்** :

- பரதநாட்டியம், கதகளி, குச்சுப்புடி ஆகியவற்றின் தோற்றம், வளர்ச்சி, பங்களிப்புச் செய்த தலைஞர்கள், மறுமலர்ச்சி ஆகிய விடயங்களை விவரிப்பார்.
- இந் நடனங்களின் புகைப்படங்களை வேறுபடுத்துவார்.
- இவற்றிற்கிடையேயுள்ள ஒற்றுமை, வேற்றுமைகளைக் குறிப்பிடுவார்.
- இந் நடனங்கள் நிலவும் மாநிலங்களைக் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ பரத நாட்டியத்தின் தோற்றம், வளர்ச்சி, பங்களிப்புச் செய்த தலைஞர்கள், மறுமலர்ச்சி தொடர்பாக மாணவர்கள் அறிந்துள்ள விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடவும்.
  - தோற்றம்.
  - வளர்ச்சி.
  - வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த கலைஞர்கள்.
  - வீழ்ச்சி.
  - மறுமலர்ச்சி.
  - மறுமலர்ச்சிக்குத் தொண்டாற்றிய கலைஞர்கள்.
  - உருப்படிகள், பாணிகள், இசை
  - பரத நாட்டியத்தின் தற்போதய வளர்ச்சி நிலை.

♦ இவற்றைக் குறிப்பெடுக்க வலியுறுத்தல்.

♦ கதகளி சம்பந்தமான படங்களை காட்சிப் படுத்திக் கலந்துரையாடுதல்.
  - கதகளி நிலவும் மாநிலம்.
  - தோற்றம்.
  - வளர்ச்சி.
  - கதகளிக்கும் கண்டிய நடனத்திற்குமிடையிலான ஒற்றுமை
  - உருப்படிகள், இசை

♦ விவரங்களைக் குறிப்பெடுக்கப் பணித்தல்.

- ♦ அவ்வாறே குச்சுப்புடி சம்பந்தமாகவும் கலந்துரையாடுதல்.
  - குச்சுப்புடி தோன்றிய மாநிலம்.
  - தோற்றம், வளர்ச்சி, வளர்ச்சிக்குப் பங்களின்னச் செய்தோர்.
  - உருப்படிகள், இசை
- ♦ விவரங்களைக் குறிப்பெடுக்க வலியுறுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- √ பரத நாட்டியத்தின் தோற்றம், வளர்ச்சி, பங்களிப்புச் செய்த தலைஞர்கள், மறுமலர்ச்சி தொடர்பாக விவரிப்பார்.
- √ கதகளி நடனம் தொடர்பாகப் பின்வரும் விடயங்களை விவரிப்பார்.
  - கதகளி நிலவும் மாநிலம்.
  - தோற்றம்.
  - வளர்ச்சி.
  - கதகளிக்கும் கண்டிய நடனத்திற்குமிடையிலான ஒற்றுமை
  - உருப்படிகள், இசை
- √ குச்சுப்புடி நடனத்தின் தோற்றம், வளர்ச்சி, வளர்ச்சிக்குப் பங்களிபுச் செய்தோர், உருப்படிகள், இசைபற்றி விளக்குவார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்4.4** : இசைக் குறியீட்டினை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.4** : ஜதிஸ்வரம் 3,4,5ஆவது கோர்வைகளை இசைக் குறியீட்டுடன் எழுதுவோம்.

**பாட வேளைகள்** : 5

**தர உள்ளீடுகள்** : ஜதிஸ்வரம் 3,4,5ஆம் கோர்வைகள் தனித்தனியே இசைக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டைகள்.

**கற்றற் பேறுகள்** :

- ஜதிஸ்வரத்தின் 3,4,5ஆம் கோர்வைகளை இசைக் குறியீட்டுடன் எழுதுவார்.
- அவற்றைக் கொலுப்பிப்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ செய்முறையிற் கொலுப்பித்த ஜதிஸ்வரத்தினை மீட்டல் செய்தல்.
- ♦ முதலில் ஒவ்வொரு தட்டிற்குள்ளும் அடங்கும் சொற்களைச் சரியாக எழுதுவதற்குப் பயிற்சியளிக்கவும்.
- ♦ பின்பு கார்வை எண்ணிக்கையை எழுதுவித்தல்.
- ♦ மாணவர்கள் எழுதும் போது கவனித்துப் பிழைகளைத் திருத்தித் தெளிவுபடுத்துதல்.
- ♦ கோர்வைகள் இசைக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டவணையைக் காட்சிப்படுத்துதல்.
- ♦ அட்டவணையைப் பார்த்து மீண்டும் ஒருமுறை தெளிவாக எழுதுவதற்கு வழிப்படுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

- √ ஜதிஸ்வரத்தின் 3,4,5ஆம் கோர்வைகளை இசைக் குறியீட்டுடன் எழுதுவார்.
- √ அவற்றைக் கொலுப்பிப்பார்.

**தேர்ச்சி 5.0** : நடனங்களின் கலாசாரப், பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை

அறிந்து கொள்வார்.

**தேர்ச்சிமட்டம்5.2** : வரலாற்றுக் காலப் பின்னணியை ஆராய்ந்து அறிவார்.

**செயற்பாடு 5.2.1** : சங்கமருவிய காலம் பற்றி அறிவோம்.

**பாட வேளைகள்** : 2

**தர உள்ளீடுகள்** : சங்கமருவிய கால வரலாறு குறிப்பு முறையில்எழுதப்பட்ட அட்டை.

**கற்றற் பேறுகள்** :

- சங்கமருவிய கால வரலாறுக் காலத்தை வரையறை செய்வார். ஆடற்கலை சிறப்புற்று விளங்கியதற்குச் சான்றாக
- விளங்கும் நூலைக் குறிப்பிடுவார்.
- மாதவியை அடிப்படையாகக் கொண்டு அக்கால நடனக் கலை பற்றிக் விளக்குவார்.
- வழக்கிலிருந்து வேறுவகை ஆடல்களைக் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ ஏற்கனவே அறிந்துள்ள சங்கமருவிய கால விடயங்களைக் கேட்டறிதல்.

♦ சங்கமருவிய கால வரலாறு எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்திப் பின்வரும் விடயங்களை விளக்குதல்.
- நூற்றாண்டு
- ஆடல் மகளிர், பக்கவாத்தியக் கலைஞர்கள்.
- அக்காலத்தில் நிலவிய ஆடல்கள்.
- அரங்கம்.
- பாவிக்கப்பட்ட முத்திரைகள்.
- தலைக் கோலிப்பட்டம்.
- வழக்கில் இருந்த வேறு வகைக் கூத்துக்கள்.
- ஆடற்கலை சிறப்புற்று விளங்கியதற்குச் சான்றாக விளங்கும் நூல், அந் நூலை இயற்றியவர்.

♦ எழுதிய குறிப்புக்களைப் பார்வையிட்டு விடுபட்ட விடயங்களைக் குறிப்பில் சேர்த்துக் கொள்வதற்கு வழிப்படுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ சங்கமருவிய கால வரலாறுக் காலத்தை வரையறை செய்வார்.

√ ஆடற்கலை சிறப்புற்று விளங்கியதற்குச் சான்றாக விளங்கும் நூலைக் குறிப்பிடுவார்.

√ மாதவியின் 11வகை ஆடல்களையும் கூறுவார்.

√ சங்கமருவிய காலத்தில் தலைக்கோலிப்பட்டம் வழங்கப்பட்டதைக்

குறிப்பிடுவார்.

√ ஆடல் மகளிர், பக்கவாத்தியக் கலைஞர்கள் பற்றிக் கூறுவார்.

√ அக்காலத்தில் நிலவிய ஆடல்கள். ஆடலுக்குரிய பாவிக்கப்பட்ட முத்திரைகள், வழக்கில் இருந்த வேறு வகைக் கூத்துக்கள் பற்றிக் கூறுவார்.

**தேர்ச்சி 1.0 :** சூழலை இரசித்துத் தமது இரசனையை வெளிப்படுத்துவார்.

# மூன்றாம் தவணை

**தேர்ச்சி மட்டம்1.3** : பரதநாட்டிய உருப்படிகளை நயந்து கூறுவார்.

**செயற்பாடு 1.3.1** : பரத நாட்டிய உருப்படியை நயந்து வெளிப்படுத்துவோம்.

**பாட வேளைகள்** : 2

**தர உள்ளீடுகள்** : அலாரிப்பு நடனம் அடங்கிய காணொளி, இறுவட்டு.

**கற்றற் பேறுகள்** :

- அலாரிப்பு அமைப்பு முறைக்கேற்ப ஆடப்பட்டுள்ளது பற்றிக் கூறுவார்.
- இதன் இராகம், தாளத்தினைக் குறிப்பிடுவார்.
- அலாரிப்பில் பயன்படுத்தப்படும் சிரோ, திருஷ்டி, க்ரீவா பேதங்களைக் குறிப்பிடுவார்.
- அலாரிப்பு பற்றிய விமர்சனத்தை முன்வைப்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ ஏற்கனவே தரம் 10இல் செய்முறையில் கற்ற அலாரிப்பின் அனுபவத்தினைக் கொண்டு காணொளி இறுவட்டில் அலாரிப்பினைப் பார்த்து ரசிக்கச் செய்தல். (புத்தாக்கம் செய்யப்பட்ட அலாரிப்பு வழங்கப்படுமாயின் சாலச் சிறந்தது)

♦ இரசித்த விடயங்களில் பின்வருவனவற்றை வெளிக்கொணர்வதற்குச் சந்தர்ப்பமளித்தல்.
  - அலாரிப்பு அமைப்பு முறைக்கு ஏற்ப ஆடப்பட்டுள்ளமை.
  - உரிய இராகத்திலும் தாளத்திலும் அமைந்துள்ளமை.
  - சிரோ, த்ருஷ்டி, க்ரீவா பேதங்களின் பிரயோகம்.
  - இதில் தத்தெய்தாம், மண்டியடவு, தாஹுத்தஜெம்தரிதா, ததிங்கிணதொம் ஆகிய அடவுகளின் பிரயோகம்.
  - பக்கவாத்தியங்களுடனான ஒத்திசைவு.
  - நடனத்திற்குப் பொருத்தமான ஆடை, அணிகலன்கள், ஒப்பனை.

♦ மேற்கூறிய விடயங்களுடனான விமர்சனத்தை முன்வைத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ அலாரிப்பு அமைப்பு முறைக்கேற்ப ஆடப்பட்டுள்ளது பற்றிக் கூறுவார்.
√ இதன் இராகம், தாளத்தினைக் குறிப்பிடுவார்.
√ அலாரிப்பில் பயன்படுத்தப்படும் சிரோ, திருஷ்டி, க்ரீவா பேதங்களைக் குறிப்பிடுவார்.
√ இந் நிகழ்வு பற்றிய விமர்சனத்தை முன்வைப்பார்.

**தேர்ச்சி 1.0** : சூழலை இரசித்துத் தமது இரசனையை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சிமட்டம் 1.3** : பரதநாட்டிய உருப்படிகளை நயந்து கூறுவார்.

**செயற்பாடு 1.3.2** : பரத நாட்டிய உருப்படியில் ஜதீஸ்வரத்தினை நயந்து வெளிப்படுத்துவோம்.

**பாட வேளைகள்** : 2

**தர உள்ளீடுகள்** : ஜதிஸ்வரம் உள்ளடங்கிய காணொளி, இறுவட்டு.

**கற்றற் பேறுகள்** :

- ஜதிஸ்வரத்தில் தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார்.
  - ஜதீஸ்வரத்தின் அமைப்பு முறை
  - பக்கவாத்தியங்களின் ஒத்திசைவு.
  - அணியப்பட்ட ஆடை, அணிகலன்கள், ஒப்பனை.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ ஏற்கனவே கற்ற ஜதீஸ்வரத்தின் இலட்சணங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுதல்.
- ♦ காணொளி இறுவட்டினூடாக ஜதீஸ்வரம் ஒன்றினைப் பார்த்து இரசிக்கச் செய்தல்.
- ♦ இரசித்த விடயங்களில் பின்வருவனவற்றை வெளிக்கொணர்வதற்குச் சந்தர்ப்பமளித்தல்.
  - ஜதிஸ்வரம் அமைப்பு முறைக்கு ஏற்ப ஆடப்பட்டுள்ளமை.
  - நடனத்திற்கும் தாளத்திற்குமான ஒத்திசைவு.
  - தீர்மானம், பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் பகுதிகள் இடம்பெற்றுள்ளமை.
  - மெய்யடவுகள் இடம் பெற்றுள்ளமை.
  - பக்க வாத்தியங்களுடனான ஒத்திசைவு.
  - நடனத்திற்குப் பொருத்தமான ஆடை,அணிகலன்கள், ஒப்பனை.
  - அபிநயத்தின் நேர்த்தி, ஒத்திசைவு
- ♦ மேற்கூறிய விடயங்களுடனான விமர்சனத்தை முன்வைத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ ஜதிஸ்வரம் அமைப்பு முறைக்கேற்ப ஆடப்பட்டுள்ளதனைக் கூறுவார்.

√ ஜதியும் ஸ்வரமும் இடம்பெற்றுள்ளமையைக் குறிப்பிடுவார்.

√ பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் பிரிவுகள் இடம்பெற்றுள்ளதைக் குறிப்பிடுவார்.

√ பக்கவாத்தியங்களின் ஒத்திசைவு, அணியப்பட்ட ஆடை, அணிகலன்கள் ஒப்பனை பற்றி விமர்சிப்பார்.

**தேர்ச்சி 1.0** : சூழலை இரசித்துத் தமது இரசனையை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்1.3** : பரத நாட்டிய உருப்படிகளை நயந்து கூறுவார்.

**செயற்பாடு 1.3.3** : பரத நாட்டிய உருப்படியில் சப்தத்தினை நயந்து வெளிப்படுத்துவோம்.

**பாட வேளைகள்** : 2

**தர உள்ளீடுகள்** : சப்தம் உள்ளடங்கிய காணொளி இறுவட்டு.

**கற்றற் பேறுகள்** :

- சப்தம் என்னும் உருப்படியில் நயந்தவற்றை வெளிப்படுத்துவார்.
  - சப்தத்தின் அமைப்பு முறை
  - பயன்படுத்தப்பட்ட பக்கவாத்திய ஒத்திசைவு
  - ஆடை அணிகள் .
  - ஒப்பனை
  - சமர்ப்பணம்

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ ஏற்கனவே கற்ற சப்தத்தின் இலட்சணங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுதல்.

♦ காணொளி இறுவட்டினைப் பார்வையிடச் செய்தல்.

♦ ஏற்கனவே அறிந்தவற்றையும் காணொளி இறுவட்டில் நயந்தவற்றையும் கொண்டு பின்வருவனவற்றை வெளிக்கொணர்வதற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.
- நிருத்தம், நிருத்தியம் ஆகிய பகுதிகள் இடம் பெறுதல்.
- கண்டிகைகளாகப் பிரிக்கப்பட்டு ஆடப்பட்டிருந்தமை.
- ஜதிகளைத் தொடர்ந்து சாகித்தியம் இடம்பெற்றிருத்தல்.
- சாகித்தியத்தில் இடம்பெற்றுள்ள தெய்வங்கள்
- பயன்படுத்தப்பட்ட பக்கவாத்தியங்களினது ஒத்திசைவு.
- ஆடை அணிகள், ஒப்பனைகள்.
- சமர்ப்பணம்

♦ மேற்கூறிய விடயங்களுடனான விமர்சனத்தை முன்வைத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ நிருத்தம், நிருத்தியம் ஆகிய பகுதிகள் இடம் பெறும் என்பதைக் கூறுவார்.
√ ஜதிகளும் சாகித்தியங்களும் இடம் பெற்றுள்ளமையைக் கூறுவார்.
√ சாகித்தியத்தில் இடம்பெற்றுள்ள தெய்வத்தினைக் குறிப்பிடுவார்.
√ பயன்படுத்தப்பட்ட பக்கவாத்தியங்களைக் குறிப்பிடுவார்.
√ அணியப்பட்ட ஆடை அணிகள், ஒப்பனைகளைக் கூறுவார்.
√ சப்தம் பற்றிய விமர்சனத்தை முன்வைப்பார்.

**தேர்ச்சி 2.0** : சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றையும் வெவ்வேறுவகையான பாடல்களையும், கோர்வைகளையும் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்2.3** : கிராமிய நடனத்திற்கு அபிநயம் அமைத்து ஆற்றுகைப்படுத்துவார்.

**செயற்பாடு 2.3** : சுளகு, செம்பு, குடம், தீபம் ஆகிய ஏந்தல் நடனங்களிற்கு அபிநயம் அமைப்போம்.

**பாட வேளைகள்** : 5

**தர உள்ளீடுகள்** : சுளகு, செம்பு, குடம், தீபம் அடங்கிய காணொளி இறுவட்டு.

**கற்றற் பேறுகள்** :

- ஏந்தல் நடனம் என்பது பொருட்களை ஏந்தி ஆடும் நடனம் என்பதைக் கூறுவார்.
- ஏந்தல் நடனங்களில் ஒன்றினைக் கிராமியப் பாங்குடன் அமைத்து அபிநயித்துக் காட்டுவார்.
- குழு ஒத்திசைவுடன் செயற்படுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ ஏந்தல் நடனம் என்றால் என்ன என்பது தொடர்பாகவும், ஏந்தியாடக்கூடிய பொருட்கள் தொடர்பாகவும் மாணவர்களுடன் கலந்துரையாடவும்.
  - சுளகு, செம்பு, தீபம், குடம், பந்து

♦ சுளகு, செம்பு, தீபம், குடம். பந்து ஆகிய நடனங்களில் ஒன்றின் பாடலினைச் செவிமடுக்கச் செய்தல்.

♦ மாணவர்களைத் தாளத்துடன் பாடுவதற்கு வழிப்படுத்தல்.

♦ இங்கு ஆசிரியரின் வகிபங்கு ஒரு வழிகாட்டி மட்டுமே

♦ இந் நடனங்களிற்கு அபிநயம் அமைக்கும் போது மாணவர்கள் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள்.
  - தாளத்திற்கு இயங்குதல்.
  - அபிநயங்களை அமைத்தல்.
  - எளிய பாதச்சுவடுகள்.
  - கிராமியப் பாங்கான இசை.
  - பொருட்களின் பிரயோகம்.
  - ஆடற் கோலங்கள்.
  - இயல்பான ஆடல் முறை
  - குழு ஒத்திசைவு

♦ குழுவாகவும் தனியாகவும் அபிநயிக்க ஊக்குவித்தல்.

♦ மாணவர்கள் அபிநயித்த நடனத்தினைப் பார்த்து பூரணப்படுத்துதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ பொருட்களை ஏந்தி ஆடும் நடனம் ஏந்தல் நடனம் என்பதனைக் குறிப்பிடுவார்.

√ சுளகு, செம்பு, தீபம், குடம், பந்து நடனத்தில் ஒன்றினை ஆக்கி அபிநயிப்பார்.

√ பல்வேறு ஆடற் கோலங்களில் அபிநயிப்பார்.

√ பாடலினைப் பாடிக் கொலுப்பித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டியத்துக்குரிய ஆரம்ப பயிற்சிகளையும், அடவுகளையும்,

அங்க பேதங்கள், ஹஸ்தங்களையும், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்3.1** : பரத நாட்டிய சம்பிரதாய உருப்படிகளை அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.1.3** : சப்தம் என்னும் உருப்படியின் 3,4ஆம் கண்டிகைகளைக் கொலுப்பித்து அபிநயிப்போம்.

**பாட வேளைகள்** : 05

**தர உள்ளீடுகள்** : சப்தம் பாடல் எழுதப்பட்ட அட்டை, சப்தம் ஆடல் உள்ளடங்கிய காணொளி இறுவட்டு.

**கற்றற் பேறுகள்** :

- சப்தம் 3,4ஆம் கண்டிகைகளை அபிநயிப்பார்.
- சப்தத்தினைக் கொலுப்பிப்பார்.
- பொருள் கூறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ முதல் தவணையில் கற்ற சப்தத்தின் .பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடுதல்.
  - சப்தத்தின் இராகம், தாளம்
  - ஜதி
  - கண்டிகைகளின் எண்ணிக்கை.
  - இடம்பெறும் தெய்வங்கள்.
  - பொருள்.

♦ சப்தத்தினை ஒவ்வொரு கண்டிகைகளாகப் பயிற்றுவித்தல்.

♦ தாளத்துடன் கொலுப்பிக்கச் செய்தல்.

♦ பயிற்சி செய்த கண்டிகைகளைத் தனியாகவும், குழுவாகவும் பயிற்சி செய்து முழுமைப்படுத்துதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ சப்தத்தின் நான்கு கண்டிகைகளையும் அபிநயிப்பார்.

√ சப்தத்தினைக் கொலுப்பிப்பார்.

√ சப்தத்தின் பொருள் கூறுவார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும்,

எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சிமட்டம்4.2** : பரத நாட்டியத்தின் அடிப்படை எண்ணக்கருக்களை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.2.5** : நவரஸம் பற்றி அறிவோம்.

**பாட வேளைகள்** : 2

**தர உள்ளீடுகள்** : நவரசங்களின் விரிவான அட்டவணை, நவரஸத்தை வெளிப்படுத்தும் படங்கள்.

**கற்றற் பேறுகள்** :

- ரஸம் என்ற பதத்தின் வரைவிலக்கணத்தைக் குறிப்பிடுவார்.
- நவம் என்றால் 9 என்பதை ஏற்பார்.
- நவரஸங்களைக் கூறுவார்.
- ரஸம் தோன்றுவதற்கான ஸ்தாயிபாவம், விபாவம், அனுபாவம், சாத்விகபாவம், வியபிச்சாரி பாவம் என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துவார்.
- ஒவ்வொரு ரஸத்திற்குமுரிய கடவுள், நிறம், எதிர் ரஸம், ஸ்தாயிபாவம், தேவதை, இராகம் ஆகியவற்றை அட்டவணைப்படுத்தல்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ ஏற்கவே கற்ற ரஸங்களை மீட்டல் செய்தல்.
♦ நவம் என்றால் 9 என்பதை உதாரணத்துடன் விளக்குதல். (நவராத்திரி, நவதானியம்)
♦ ஸ்தாயிபாவம், விபாவம், அனுபாவம், சாத்விகபாவம், வியபிச்சாரி பாவம், ஆலம்பன விபாவம், உத்தீபன விபாவம், ஆகியவற்றை விளக்குதல்.
♦ ஒவ்வொரு ரசத்திற்குமான ஸ்தாயிபாவம், விபாவம், அனுபாவம், சாத்விகபாவம், வியபிச்சாரி பாவம் ஆகியவற்றை காட்சிப்படுத்தப்பட்ட அட்டவணையின் உதவியுடன் விளக்குதல்.
♦ மாணவர் அட்டவணையைப் பார்த்து எழுதுவதற்கு அறிவுறுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ நவரசங்களைக் கூறுவார்.
√ நவம் என்றால் 9 என்பதை உதாரணத்துடன் கூறுவார்.
√ ஸ்தாயிபாவம், ஆலம்பன விபாவம், உத்தீபன விபாவம், அனுபாவம், சாத்விகபாவம், வியபிசாரி பாவம் போன்ற பதங்களை விளக்குவார்.
√ ஒவ்வொரு ரஸத்திற்குமான ஸ்தாயிபாவம், ஆலம்பன விபாவம், உத்தீபன விபாவம், அனுபாவம், சாத்விகபாவம், வியபிசாரிபாவம் ஆகியவற்றை விவரிப்பார்.

**தேர்ச்சி 4.0 :** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3 :** இந்திய சாஸ்திரிய நடனங்களை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.3.2 :** கதக், ஒடிசி, மோகினியாட்டம், மணிப்புரி ஆகிய நடனங்கள் பற்றி அறிந்துகொள்வோம்.

**பாட வேளைகள் :** 04

**தர உள்ளீடுகள் :** கதக், ஒடிசி, மோகினியாட்டம், மணிப்புரி ஆகிய நடனங்கள் பற்றி எழுதப்பட்ட அட்டைகள், அவை பற்றிய படங்கள்.

**கற்றற் பேறுகள் :**

- கதக், ஒடிசி, மோகினியாட்டம், மணிப்புரி ஆகியவற்றின் தோற்றம், வளர்ச்சி, பங்களிப்புச் செய்த கலைஞர்கள் ஆகிய விடயங்களை விவரிப்பார்.
- நடனங்களின் ஆடை, அணிகலன்களைக் கொண்டு அவற்றை வேறுபிரித்தறிவார்.
- இவற்றிற்கிடையேயுள்ள ஒற்றுமை, வேற்றுமைகளைக் குறிப்பிடுவார்.
- இந் நடனங்கள் நிலவும் மாநிலங்களைக் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ கதக் நடனத்தின் பின்வருவன தொடர்பாக மாணவர்கள் அறிந்துள்ள விடயங்களைக் கலந்துரையாடவும்.
  - தோற்றம்.
  - வளர்ச்சி.
  - வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த கலைஞர்கள்.
  - உருப்படிகள், இசை
  - தற்போதய வளர்ச்சி நிலை.

♦ கதக் சம்பந்தமான படங்களைக் காட்சிப்படுத்துதல்.

♦ இவ்வாறே ஏனைய நடனங்களையும் காட்சிப்படுத்தி அதே செயலொழுங்கை மேற்கொள்ளுதல்.

♦ தென்னிந்திய சாஸ்திரிய நடனங்களின் படங்களை வழங்கி அவற்றை இனங்காண வழிப்படுத்தவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

√ கதக், ஒடிசி, மோகினியாட்டம், மணிப்புரி ஆகியவற்றின் தோற்றம், வளர்ச்சி, பங்களிப்புச் செய்த கலைஞர்கள், உருப்படிகள், இசை, தற்போதய வளர்ச்சி நிலை ஆகிய விடயங்களை விவரிப்பார்.

√ நடனங்களின் ஆடை, அணிகலன்களைக் கொண்டு அவற்றை வேறுபிரித்தறிவார்.

**குறிப்பு -** தென்னிந்திய சாஸ்திரிய நடனங்கள் அனைத்தும் கற்பித்து முடிந்தவுடன் அனைத்து நடனங்களையும் தொகுத்து மாணவர்களுக்கு அட்டவணையாக வழங்கப்பட வேண்டும்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்4.5** : பரதநாட்டிய இசைக்கருவிகளை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.5.1** : பரத நாட்டியத்திற்குரிய இசைக்கருவிகளைப் பற்றி அறிவோம். (நட்டுவாங்கத்தாளம், மிருதங்கம், வீணை, புல்லாங்குழல், வயலின்)

**பாட வேளைகள்** : 5

**தர உள்ளீடுகள்** : பரத நாட்டிய இசைக்கருவிகளின் பாகங்கள் குறிப்பிட்ட படங்கள், பரத நாட்டியக் கச்சேரியில் இசைக்கருவிகளின் பயன்பாட்டுடனான காணொளி இறுவட்டு.

**கற்றற் பேறுகள்** :

- பரத நாட்டியத்திற்குப் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகளைக் கூறுவார்.
- இசைக்கருவிகளின் அமைப்பு முறையினை வரைந்து பாகங்களைக் குறிப்பார்.
- பரத நாட்டியத்தில் அவற்றின் பிரயோகத்தினை விளக்குவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ மாணவர்களின் அனுபவத்தின் அடிப்படையில் பரத நாட்டியத்திற்குப் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகள் பற்றியும், அதன் பயன்பாடு பற்றியும் கலந்துரையாடல்.
- ஏற்கனவே தரம் 10இல் இரசித்த பக்க வாத்தியங்களையும் அவற்றின் பிரயோகங்களையும் நினைவிற்குக் கொண்டு வருதல்.

♦ கொடுக்கப்பட்ட தர உள்ளீடுகளில் கிடைக்கக் கூடியவற்றைப் பயன்படுத்திப் பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடுதல்.
  - பரத நாட்டியத்தின் முக்கிய அணிசேர் இசைக்கருவிகள்.
  -
  - ஒவ்வொரு கருவிகளினதும் தோற்றம், அமைப்பு முறை, பரத நாட்டியத்தில் அதன் பயன்பாடு.

♦ கலந்துரையாடலின் போது குறிப்புக்கள் எடுப்பதற்கு வழிப்படுத்துதல்.

♦ எழுதிய குறிப்புக்களைப் பார்வையிட்டு விடுபட்ட விடயங்களைத் தெளிவுபடுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ பரதநாட்டிய கச்சேரிக்குப் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளைக் குறிப்பிடுவார்.

√ அவற்றின் தோற்றத்தினைக் குறிப்பிடுவார்.

√ அவற்றின் அமைப்பினை வரைந்து பாகங்களைக் குறிப்பார்.

√ பரதநாட்டியத்தில் இக்கருவிகளின் பயன்பாடு பற்றிக் குறிப்பிடுவார்.

**குறிப்பு** : இசைக்கருவிகளின் படம் வரைந்து பாகங்கள் குறித்தல், பரத நாட்டியத்தில் அவற்றின் பயன்பாடு, இவை மட்டுமே எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சி 5.0** : நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்5.1** : கலைஞர்களின் வரலாற்றுப் பின்னணியை ஆராய்ந்து அறிவார்.

**செயற்பாடு 5.1.2** : தஞ்சாவூர் க.பொன்னையாபிள்ளையின் பற்றி அறிவோம்.

**பாட வேளைகள்** : 2

**தர உள்ளீடுகள்** : தஞ்சாவூர் கலாநிதி பொன்னையாபிள்ளையின் புகைப்படம், அவர் பற்றிய குறிப்புகள் அடங்கிய அட்டை.

**கற்றற் பேறுகள்** :

- தஞ்சாவூர் பொன்னையாபிள்ளை அவர்களின் தோற்றம், வாழ்க்கைப் பின்னணி, கலைக்காற்றிய தொண்டு ஆகியவற்றை அறிந்து விபரிப்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ தஞ்சை பற்றி மாணவர்கள் அறிந்து வைத்துள்ள விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பாடப் பிரவேசம் செய்யவும்.

♦ தஞ்சாவூர் பொன்னையாபிள்ளை அவர்களின் புகைப்படத்தைக் காட்சிப்படுத்திப் பின்வரும் விடயங்களை முன்வைக்கவும்.
- பிறப்பு
- பெற்றோர்
- கலைப் புலமை
- தமிழின் மீதான பற்று

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ தஞ்சாவூர் கலாநிதி பொன்னையாபிள்ளை அவர்களின் பிறப்பு, பெற்றோர் பற்றிக் குறிப்பிடுவார்.

√ இவரது கலைப் புலமை பற்றி விளக்குவார்.

√ இவர் கலைக்காற்றிய தொண்டு பற்றிக் குறிப்பிடுவார்.

√ தமிழில் இவர் இயற்றிய உருப்படிகளைக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 5.0** : நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை

அறிந்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்5.2** : வரலாற்றுக் காலப் பின்னணியை ஆராய்ந்து அறிவார்.

**செயற்பாடு 5.2.2** : பல்லவர் கால வரலாறு பற்றி அறிவோம்.

**பாட வேளைகள்** : 2

**தர உள்ளீடுகள்** : பல்லவர் கால வரலாறு எழுதப்பட்ட அட்டை, வரலாற்று நூல்கள், மாமல்லபரச் சிற்பங்களைக் காட்டும் படங்கள்.

**கற்றற் பேறுகள்** :

- பல்லவர் ஆட்சிக் காலப்பகுதியைக் குறிப்பிடுவார்.
- பல்லவர் கால மன்னர்களில் கலையை வளர்த்த மன்னர்களின் பெயர்களைப் பட்டியற்படுத்துவார்.
- நடனக் கலை மாதர்கள்.பற்றிப் பதிகங்களில் குறிப்பிடப்ப்டுள்ள விடயங்களைத் தொகுத்துக் கூறுவார்.
- பக்தி நெறியினூடான நடனக் கலை வளர்ச்சி பற்றி விளக்குவார்.
- மன்னர் கலைக்காற்றிய பணி பற்றிக் குறிப்பிடுவார்.
  பக்தியும் கலையும் ஒன்றுடன் ஒன்று பிணைந்து
  வளர்த்துள்ளமையை ஏற்றுக் கொள்வார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

♦ மாணவர்கள் அறிந்து வைத்துள்ள தேவாரத்தில் கலை சம்பத்தப்பட்ட சொற்பதங்களில் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடவும்.
(உ+ம்)
'பண்ணிமையாலே பாடியும் ஆடியும்
பயில வல்லார்கள் பரலோகம் சேர்வரே
பண்ணிசை பகர்லார் பற்றறுப்பார்
பண்ணியல்பாக பக்திமையாலே
பாடியும் ஆடியும் பயிலவல்லோர்கள்
விண்ணவர் விமான கொடுவர ஏறி
வியனுலகொண்டு வீற்றிருப்பரே'

♦ பல்லவர் கால வரலாறு எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி பின்வரும் விடயங்களை விளக்குதல்.
  - காலப்பகுதி.
  - நடனக் கலை மாதர்கள்.
  - பக்தி நெறியினூடான நடனக் கலை வளர்ச்சி.
  - மன்னர்களின் ஆதரவு.

♦ கலந்துரையாடலை மேற்கொள்ளும் போது குறிப்பெடுக்கும் படி வலியுறுத்தல்.

♦ எழுதிய குறிப்புகளைப் பார்வையிட்டு விடுபட்ட விடயங்களை குறிப்பில் சேர்த்துக் கொள்வதற்கு வழிப்படுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

√ பல்லவர் காலம் 6-9 நூற்றாண்டு வரையான காலப்பகுதி என்பதைக் குறிப்பிடுவார்.

- பல்லவர் ஆட்சிக் காலப் பகுதியைக் குறிப்பிடுவார்.

- பல்லவர் கால மன்னர்களில் கலையை வளர்த்த மன்னர்களின் பெயர்களைப் பட்டியற்படுத்துவார்.

- நடனக் கலை மாதர்கள் பற்றிப் பதிகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைத் தொகுத்துக் கூறுவார்.

- பக்தி நெறியினூடான நடனக் கலை வளர்ச்சி பற்றி விளக்குவார்.

- மன்னாகள் கலைக்காற்றிய பணி பற்றிக் குறிப்பிடுவார்.